பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 01 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** தமிழக மக்கள் நலனுக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

**2)** திறன் பயிற்சி மூலம் இளையோருக்கு எண்ணற்ற வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**3)** தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் **141** சிறிய விளையாட்டு அரங்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**4)** சென்னை, செங்கல்பட்டு உட்பட 7 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** இந்தியா — நியூசிலாந்து இடையேயான இரண்டாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் ராய்பூரில் தொடங்குகிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

தமிழக மக்கள் நலனுக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஊழல் மற்றும் குற்றச் சம்பவங்கள் தமிழகத்தில் அதிகரித்துள்ளதாகவும், மக்கள் ஆட்சிமாற்றத்தை விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

***(Sound Byte — மோடி (1) - 47 Sec.)***

வாரிசு அரசியலுக்கு மட்டுமே திமுக முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவர் குறை கூறினார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக 11 லட்சம் கோடி ரூபாயை தமது அரசு வழங்கியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

***(Sound Byte — மோடி (2) - 40 Sec.)***

தமிழ் மொழயின் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் பிரதமர் பட்டியலிட்டார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி பேசுகையில், ஊழல்தான் திமுக அரசின் சாதனை என்று குறிப்பிட்டார்.

குடும்ப அரசியலுக்கு இந்த தேர்தல் மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தங்கள் கூட்டணிக்கு ஆதரவாக மக்கள் துணை நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்றத் திட்டங்களை பிரதமர் வழங்கியுள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

இக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன், சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள இதர கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றினர்.

<<<<<<<>>>>>

திறன் பயிற்சி மூலம் இளையோருக்கு எண்ணற்ற வாய்ப்புகளை மத்திய அரசு வழங்கி வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

இளையோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குவதற்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்

இதன்மூலம் பெண்களும் அதிக அளவில் பயனடைந்து வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் **141** சிறிய விளையாட்டு அரங்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், எவ்வித பாரபட்சமும் இன்றி அனைத்துத் தொகுதிகளிலும் இணை விளையாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<<<<>>>>>

ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதற்கான விதிமுறைகளில் சில தளர்வுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, உள்ளூர் காளைகளும், வீரர்களும் பங்கு பெறுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக இணையதள பதிவினை மாற்றி, மாவட்ட

அளவில் முடிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாடுபிடி வீரர்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டாயம் என்ற விதி தளர்த்தப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களிடம் உறுதிமொழி பத்திரம் பெறும் நடைமுறை ரத்து செய்யப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

திருவனந்தபுரம் — தாம்பரம் இடையேயான அம்ரித் பாரத் ரயில் சேவையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இந்த ரயில் சேவையை தொடங்கிவைத்தார்.

திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்ட இந்த ரயிலுக்கு வள்ளியூர் ரயில் நிலையத்தில் பொதுமக்கள் பூக்களை தூவி வரவேற்பு அளித்தனர்.

இந்த ரயில் சேவை தென்மாவட்ட மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று ரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர், எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Voice Byte —ரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர் -42 Sec. )***

<<<<<<<>>>>>

நகராட்சி நிர்வாகத்துறையில் முறைகேடுகள் நடந்துள்ளதாக கூறி, அமலாக்கத்துறை அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத்துறை ஆரம்பகட்ட விசாரணையை தொடங்கியுள்ளதாக தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு விசாரணையின்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் இதனை தெரிவித்து அது தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்தார்.

காவல்துறை தலைவர் சார்பில் பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் கோரப்பட்டது.

இதனை ஏற்ற நீதிமன்றம் விசாரணையை வரும் 28-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது.

<<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சென்னை, செங்கல்பட்டு உட்பட 7 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

*(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 56 Sec. )*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

---------------

திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை ஆட்சியர் திரு சரவணன் வழங்கினார்.

---------------

தருமபுரி மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு சதீஷ் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் இலவச ஆயுஷ் மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

---------------

சமயபுரம் மாரியம்மன் கோவிலில் தைப்பூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா — நியூசிலாந்து இடையேயான இரண்டாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

ராய்பூரில் நடைபெற உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், **11-3,11-6, 9-11, 11-13** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Lucy Turmel** -ஐ வென்றார்.

-----------

தோஹாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இநதியாவின் **Syndrela Das** பட்டம் வென்றார்.

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் **11-8, 11-9, 10-12, 11-6** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Divyanshi Bhowmick** -ஐ வென்றார்.

------------------

மஸ்கட் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah — Diya Chitale** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **10-12, 8-11, 11-8, 11-8, 11-8** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Thibault Poret — Charlotte Lutz** இணையை வென்றது.

**<<<<<<<<END>>>>>>**